# முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி

**திருவாரூர் மாவட்டம்**

**ந.க.எண். 24/ 2022 /அ1** **நாள். 17.03.2022**

## ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்

முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி சார்பாக 2021–2022 **15வது நிதிக்குழு மான்ய** திட்டத்தின் கீழ், அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **06.04.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** முத்துப்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே **06.04.2022** மாலை **3.30** மணிக்கு பிரிக்கப்பட்டு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://tenders.tn.gov.in, https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளில் **06.04.2022** மாலை **3.00** மணிக்குள் இலவசமாக பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

### 2021–2022 15வது நிதிக்குழு மான்யம்

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | முன்வைப்புத் தொகை ரூ | ஒப்பந்தப் புள்ளி படிவக் கட்டணம் ரூ | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | மன்னார்குடி சாலையில் புல எண்.121–A1 அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக வட்டார சுகாதார மைய கட்டிடம் கட்டுதல் | 50,00,000/- | 50,000/- | **9000** +1620(GST) | 9 மாதங்கள் |

### நிபந்தனைகள்

1. தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விவர ஒப்பந்தப்புள்ளி ஆகியவை தனித் தனியாக உறையில் மூடி முத்திரையிட்டு இன்ன வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி என்பதனை தெளிவாக எழுதி செயல் அலுவலர், முத்துப்பேட்டை பேரூராட்சி என விலாசமிட்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் கொடுத்திட வேண்டும். மேற்கண்ட இணைய தளம் முகவரிகளில் ஒப்பந்தப்புள்ளிகளை உரிய இணைப்புகளுடன் பதிவேற்றம் செய்யலாம்.

2. ஒப்பந்தப்புள்ளியுடன் அவ்வேலைக்கான டேவணித் தொகையை முத்துப்பேட்டை பேரூராட்சியில் செலுத்தியதற்கான ரசீதை இணைத்துக் கொடுக்க வேண்டும். முன்வைப்புத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப்புள்ளிகள்நிராகரிக்கப்படும்.

3. அ) 01.04.2021 க்கு பின் புதுப்பித்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கும், பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்படும்.

ஆ) ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://tntenders.gov.in, http://tenders.tn.gov.in, ஆகிய வலைதளங்களில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இ) ஒப்பந்ததாரர்கள், சரக்கு மற்றும் சேவை வரி பதிவு எண் பெற்றவராகவும், வருமானவரி பதிவு எண் பெற்றவராகவும் இருக்க வேண்டும். இனி பதிவு எண் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அதன் விபரம் தெரிவித்திருக்க வேண்டும். இனி பதிவு செய்வதினால், பிடித்தமாகும் சரக்கு மற்றும் சேவை வரி, வருமான

வரி, அந்தந்த துறைக்கு செலுத்துவதினைதிரும்ப பெறுவதில் பிரச்சனை ஏற்படுமானால் அதற்கு இப்பேரூராட்சி பொறுப்பு ஆகாது.

ஈ) வேலை முடிவுற்று அளவு, மேலளவு முடிவுற்று வேலைப் பட்டியல் அளிக்கப்பட்ட பின்னர், இவ்வேலை தொடர்பான புகாரின் பேரில், மறு அளவு மேற்கொள்ள உத்திரவிடப்படும் நிலையில், மறு அளவுப்படியான வேலைத் தொகையை பெற்றுக்கொள்வேன் என எழுத்து மூலம் உறுதிமொழி அளிக்கக்கூடியவர்களுக்கு மட்டுமே டெண்டர் ஷெட்யூல் படிவம் வழங்கப்படும்.

உ) இந்ததிட்டச் சாலைப்பணி முடிக்கப்பட்டவுடன்,மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு சாலைப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை ஒப்பந்தகாரரே தனது சொந்த செலவில் சீரமைத்து தர வேண்டும்.அல்லது பராமரிப்பு செலலவினத்தை ஏற்க வேண்டும்.

4. அ) ஒப்பந்தப்புள்ளிகளில் திருத்தங்கள் இருப்பின், அவை ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவரால் கையொப்பமிட்டு ஒப்புதல் செய்யப்பட வேண்டும்.

ஆ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மனுக்கள் செயல் அலுவலரால் குறிப்பிட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு பின் பிரித்து அப்போது வருகைதந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இ) ஒப்பந்தப்புள்ளி பிரித்து பரிசீலிக்கும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு செயல் அலுவலரின் தீர்ப்பே முடிவானதாகும்.

ஈ) ஒப்பந்தப்புள்ளி தேதியினை ஒத்தி வைக்கவோ, மாற்றி அமைக்கவோ சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நிபந்தனைகளை ஏற்படுத்தவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

5. அ) ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ இப்பேரூராட்சி செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

ஆ) எந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறதோ அதனை கொடுத்தவர் அந்த வேலையை செய்து முடிக்க உத்திரவு பெற்ற ஏழு தினங்களுக்குள் ரூ50/–க்கான முத்திரைத்தாளில், இவ்வேலைக்கு ஒப்பந்தப் பத்திரம் ஒன்று நிர்வாக அலுவலருக்கு எழுதிக் கொடுத்திட வேண்டும்.

இ) பணி குறித்த விபரங்கள் அடங்கிய G.I பைப் மற்றும் பலகைகளால் வேலை நடைபெறும் இடத்தில் அமைக்க வேண்டும்.

ஈ) பணிகளுக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள் அனைத்தினையும், அரசு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்து அதன் பின்னர் வேலை தொடங்கப்படவேண்டும்.

6.அ) ஒப்பந்தக்காரர் செலுத்தியிருக்கும் வைப்புத்தொகை, அவ்வேலை சரிவர செய்யப்பட்டு, அதன் தணிக்கை முடிந்த பிறகு திரும்ப கொடுக்கப்படுவதாகும். தணிக்கையில் ஏதாவது பிடித்தம் இருப்பின், அதை பிடித்துக் கொண்டு, மீதித் தொகையை மட்டும் திரும்ப கொடுப்பதற்கு உட்படும்.

ஆ) வைப்புத் தொகைக்கோ, யாதொரு சூழ்நிலை முன்னிட்டு நிலுவைப்படும் வேலைத் தொகைக்கோ வட்டி வழங்கப்பட மாட்டாது.

இ) வேலைத் தொகை வழங்கப்படும் தேதியிலிருந்து , அவ்வேலையின் தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கை வரப்பெற்ற பின்னர் தணிக்கை தடை ஏதுமில்லை என்றால் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் காப்புத் தொகை திரும்ப கொடுக்க தகுதிபெறும்.

ஈ) ஏற்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள முன்வைப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளில் பேரிலான இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்திற்குப் பின் காசோலை மூலம் திரும்ப கொடுக்கப்படும்.

7. அ) வேலைத் தொகையில் அமலில் உள்ள விகிதப்படி வருமான வரி பிடித்தம் செய்து வருமான வரித் துறைக்கு செலுத்தப்படும்.

ஆ) தமிழக அரசு தற்போதுள்ள GST வரி சட்டவிதிகள்படி சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தம் செய்து உரிய துறைக்கு செலுத்தப்படும். மேலும் தொழிலாளர் நல பங்குத் தொகை 1% பட்டியல் தொகை பிடித்தம் செய்யப்படும்.

8.அ) ஒப்பந்ததாரர் வேலைகளை செய்து முடிக்க உத்திரவிட்ட காலக் கெடுவிற்குள் செய்து முடிக்க வேண்டும். தவறினால் அபராதம் விதிக்கவும் அதனை வேலைத் தொகையில் பிடித்தம் செய்யவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

ஆ) வேலையை செய்து முடிக்க ஒப்பந்ததாரர் முன்வராத நிலையில் ஒப்பந்ததாரர் பொறுப்பில், செலவில் ரத்து செய்து அதனை துறை மூலமோ அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோரியோ முடிக்கப்படும்.

9.அ) திட்டநிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் வேலைகள் எடுக்கப்பட்டுள்ளதால், நிதி வரப்பெறுவதற்கு ஏற்ப வேலைத் தொகை முழுவதுமாகவோ, பகுதிகளாகவோ வழங்கப்படும்.

ஆ) வேலையின் மதிப்பீடுகளில், தொழில்நுட்ப பணியாளர் சம்பளம், எதிர்பாராத சில்லரை செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளதால், வேலைகளின் அளவுகள்படியான வேலைத்தொகை, மதிப்பீடு தொகைக்கு இயல்பாக குறைபடும்.

10.வேலை ஆரம்பிப்பதற்கு முன்பும், வேலை நடைபெறும்போதும், வேலை முடிந்த பின்னரும் என்ற நிலைகளில் புகைபடங்கள் (Maxi Size மற்றும் A4 Size) போட்டோ எடுத்து அளிக்க வேண்டும். புகைபடங்கள் ஒப்பந்ததாரர் பொறுப்பில் எடுத்துக் கொடுக்க வேண்டும்.

11.வேலையின்போது வேலை முடிந்த பின்னர் மண்டல அலுவலர் (Zonal Officer) பார்வையிடுவதில், வழங்கும் அறிக்கையின் பேரில் வேலைத் தொகை மாறுதலானால் மாறுதலாகும் தொகையே வழங்குவதற்கு உட்படும்.

12. வேலைத் தொகை யாவும், அவ்வேலையின் ஆவணங்கள் பரிசீலித்து பட்டுவாடா செய்யப்படும்.

13.அ)மதிப்பீட்டில், டெண்டரில் வேலைக்கான மூலப்பொருள்கள் எந்தந்த அளவுகளில் சேகரிக்க குறிப்பிடப்பட்டு உள்ளனவோ அதே சைஸ்களில் சேகரம் செய்யப்பட வேண்டும். ஏற்க முடியாத அளவுக்கு மீறியவைகள் / அளவுக்கு குறைவானவை நிராகரிக்கப்படும்.

இ) செயற்பொறியாளரிடம் அணைத்து பணிகளுக்கும் சோதனை அளவுகள் (Check Measurment) சான்று பெறப்பட வேண்டும்.

14. ஒப்பந்த வேலைக்கான டெண்டர் டேவணித்தொகையினை 06.04.2022 பிற்பகல் 3.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும்.

15. திட்டநிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் வேலைகள் எடுக்கப்பட்டுள்ளதால் நிதி வரப்பெறுவதற்கு ஏற்ப வேலைத் தொகை முழுவதுமாகவோ, பகுதிகளாகவோ வழங்கப்படும்.

16. வேலையின் மதிப்பீடுகளில் தொழில் நுட்ப பணியாளர் சம்பளம், எதிர்பாராத சில்லரை செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளதால், வேலைகளின் அளவுகள் படியான வேலைத் தொகை, மதிப்பீடு தொகைக்கு இயல்பாக குறைபடும்.

. 17. மதிப்பீட்டில், வேலைக்கான மூலப்பொருள்கள் எந்தெந்த அளவுகளில் சேகரிக்க குறிப்பிடப்பட்டு உள்ளனவோ அதே அளவுகளில் சேகரம் செய்யப்பட வேண்டும். ஏற்க முடியாத அளவுக்கு மீறியவைகள் / அளவுக்கு குறைவானவை நிராகரிக்கப்படும்.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. ரூ.25.00 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பீடுள்ள பணிகளுக்கு இரண்டாம் நிலை (Class – II) மற்றும் அதற்கு மேலு

2. ரூ.25.00 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கோ வேலைக்கான கருவிகள், தளவாடங்கள், வாகனங்கள், பேவர் இயந்திரம் மற்றும் பொருட்கள் சேகரத்திற்கான இடம் (Plant) ஆகியவற்றை வைத்திருப்பதற்கான சான்றொப்பமிட்ட நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

3. ரூ.25.00 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளியுடன் கடந்த மூன்றாண்டுகளுக்கான வருமானவரி, சரக்கு மற்றும் சேவை வரி கணக்கு சமர்பித்த சான்றொப்பமிட்ட அறிக்கை நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

4. ரூ.25.00 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட பணிகளுக்கு தொழில்நுட்ப உதவியாளரை வேலையில் அமர்த்தியமைக்கான சான்று மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் சான்றொப்பமிட்ட கல்வித்தகுதி சான்று நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

5. ரூ.25.00 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட பணிகளுக்கு கடந்த மூன்றாண்டுகளில் 25.00 லட்சத்திற்கு குறையாத பணிகள் செய்தமைக்கான வேலை உத்திரவு நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

6. ஒப்பந்தக்காலத்திலோ அல்லது பணி முடிவு காலம் வரையிலோ ஏற்படும் பொருட்களின் விலையேற்றத்திற்கு பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பாகாது.

செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி
முத்துப்பேட்டை.

பெறுதல்

பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள், முத்துப்பேட்டை பேரூராட்சி.
(அஞ்சலிட்ட சான்று மூலம்)

நகல்:

1. பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2. திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) தஞ்சாவூர் அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. உதவிப்பொறியாளர், பேரூராட்சி, முத்துப்பேட்டை (தொகுப்பு)
6. முத்துப்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட அரசு அலுவலகளில் ஒட்டி விளம்பரம் செய்யும் பொருட்டு
7. முத்துப்பேட்டை பேரூராட்சி அலுவலக விளம்பர பலகைக்கு.